

# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாகப் புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 10.04.2025 | விழுப்புரம் மத்தியம் | வானூர் | சித்தலம்பட்டு ஊராட்சி அலுவலகம், கண்டமங்கலம் | கோவி. லெனின், வீ. வேல்முருகன் |
| 2 | 11.04.2025 | கடலூர் கிழக்கு | கடலூர் | கடலூர் | **திருச்சி சிவா** எம்.பி., கு.அஷ்வின் |
| 3 | 12.04.2025 | நாமக்கல் மேற்கு | திருச்செங்கோடு | தேவனாங்குறிச்சி, திருச்செங்கோடு | பேராசிரியர் **சுப.வீரபாண்டியன்,** க.நந்தகுமார் |
| 4 | 12.04.2025 | கரூர் | குளித்தலை | தோகை மலை | செந்தில்வேல், வே.குணஸ்ரீ |
| 5 | 12.04.2025 | கள்ளக்குறிச்சி தெற்கு | கள்ளக்குறிச்சி | வானவரெட்டி ஊராட்சி | சூர்யா கிருஷ்ணமூர்த்தி, ஆ.ஷர்மிளா |
| 6 | 13.04.2025 | ஈரோடு வடக்கு | பவானிசாகர் | அரியப்பம்பாளையம் | எழுத்தாளர் வே.மதிமாறன், மு.கௌரி மனோகரி |
| 7 | 15.04.2025 | கள்ளக்குறிச்சி தெற்கு | ரிஷிவந்தியம் | மேல் சிறுவளூர் கூட்டுரோடு | வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி, ச.ஐஸ்வர்யா |
| 8 | 19.04.2025 | புதுக்கோட்டை வடக்கு | கந்தர்வக்கோட்டை | பேருந்து நிலையம் அருகில், கந்தர்வக்கோட்டை | தமிழ் கா.அமுதரசன், இ.நேரு |
| 9 | 19.04.2025 | கடலூர் கிழக்கு | புவனகிரி | கம்மாபுரம் | எழுத்தாளர் வே.மதிமாறன், ர.கோமதி |
| 10 | 20.04.2025 | கடலூர் கிழக்கு | குறிஞ்சிப்பாடி | குள்ளஞ்சாவடி | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, நா.சத்தியப்பிரியன் |
| 11 | 26.04.2025 | கடலூர் கிழக்கு | சிதம்பரம் | பரங்கிப்பேட்டை | **நாஞ்சில் சம்பத்,** க.செல்வமணி |
| 12 | 27.04.2025 | கடலூர் கிழக்கு | காட்டுமன்னார்கோயில் | திருமுட்டம் | வழக்கறிஞர் ராஜீவ் காந்தி, க.தமிழ்மணி |

**அன்பகம்,** சென்னை – 18.
நாள் : 07–04–2025.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி

---

இன்று (10-ஆம் தேதி) நடைபெறுகிறது:

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

காஞ்சிபுரம், ஏப். 10-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் இன்று (10.04.2025 வியாழக்கிழமை) மாலை 3.00 மணியளவில் ஆலந்தூர் கத்திப்பாரா ஜோதி திரைய ரங்கம் அருகில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில், அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையிலும், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணா நிதி, எம்.எல்.ஏ.,



வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட பொருளாளர் வெ. விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில, மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. வருகிற 18ஆம் தேதி அன்று குன்றத்தூரில் முதல்வர், தலைவர் தளபதி அவர்கள் பங்கேற்கும் "கலைஞர் கைவினைத் திட்டம்" தொடக்க விழா குறித்து. 2. கழக வளர்ச்சி.

இவ்வாறு அமைச்சர் தா. மோ.அன்பரசன் தெரிவித்துள்ளார்.



மதுரை வைகை ஆற்றில் தண்ணீரில் மூழ்கி உயிரிழந்த விளாங்குடியைச் சேர்ந்த பெரியகருப்பன் என்ற ஆகாஷ் (வயது 18) குடும்பத்தாருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 1 லட்சத்திற்கான காசோலையை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார். உடன் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மதுரை வருவாய் கோட்டாட்சியர் ஷாலினி, தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் கார்த்திகாயினி, மதுரை வடக்கு வட்டாட்சியர் மஸ்தான் கனி ஆகியோர் உள்ளனர்.

---

## அகமதாபாத்தில் காங்கிரஸ் தேசிய செயற்குழு கூட்டம்! சோனியா காந்தி - ராகுல் காந்தி பங்கேற்பு!

ஆமதாபாத், ஏப். 10 -

அகில இந்திய காங்கிரஸ் செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் நேற்று (புதன்கிழமை) தொடங்கியது. காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தலைமையில் 2 நாள் நடக்கும் இந்த மாநாட்டில் நாடாளுமன்ற குழுத் தலைவர் சோனியா காந்தி, மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, காங்கிரஸ் ஆளும் மாநிலங்களின் முதல மைச்சர்கள், மாநிலத் தலைவர்கள் என நாடு முழுவதிலும் இருந்து நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் நேற்று (புதன்கிழமை) காங்கிரஸ் தேசிய செயற்குழு கூட்டம் தொடங்கியது. இதில் நிறைவேற்றப்பட வேண்டிய முக்கிய தீர்மானங்கள் குறித்து விவாதிக்க காங்கிரஸ் காரிய கமிட்டி மற்றும் மத்திய தேர்தல் குழு கூட்டம் அகமதாபாத்தில் வல்லபாய் பட்டேல் நினைவிடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.



இந்தித் திணிப்பு நிதி பகிர்வில் பாரபட்சம் தொகுதி மறு சீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் பல்லாவரம் பேருந்து நிலையம் அருகில் மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர் கோவி. செழியன், மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டு கண்டன உரை நிகழ்த்தினார்கள். உடன் மீ.அ.வைத்தியலிங்கம், மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ. காமராஜ், வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயக்குமார், இ.எஸ்.பெர்னார்ட், ஏ.கே.கருணாகரன், ஜி.கே.ரவி, கோல்டு டி.பிரகாஷ், தொ.மு.ச. பொன்ராம், அ.தமிழ்மாறன், எல்.பிரபு, ரவிச்சந்திரன், கோ.ஜானகிராமன், பி.கே.ஏ.சத்திய பிரபு ஆகியோர் இருந்தனர்.